**OS. 39/2014**

**நாள். 15.02.2023**

**வா.சா. 4 –** நவநீத கிருஷ்ணன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

தாவா சொத்து முத்துவெயிலு சேர்வைக்கு எப்படி பாத்தியம் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். முத்து வெயிலு சேர்வை 25.03.1960 அன்று அவர் நல்ல நிலையில் இருந்தாரா என்ற விவரமும் அவர் அன்றைய தினம் உயில் எழுதிவைத்த விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். முத்து வெயிலு சேர்வை எழுதி வைத்ததாக சொல்லும் உயில் பத்திரத்தில் அவர் கையெழுத்து போட்டாரா என்ற விவரமும், அந்த உயிலை பதிந்து வைத்தாரா என்ற விவரமும் எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். அந்த உயில் பத்திரத்தில் என் அப்பா குமரகுரு சாட்சி கையெழுத்து போட்டாரா என்ற விவரம் எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். என் தகப்பனார் கையெழுத்து போட்ட வேறு ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உயில் பத்திரத்தில் மற்ற சாட்சிகள் கையெழுத்து போட்ட விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த சாட்சிகள் கையெழுத்து போட்ட வேறு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்கள் வீட்டில் வைத்து பஞ்சாயத்து பேசிய விவரம் எனக்கு தெரியும் என்று வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உயில் பத்திரத்தின் அசலை நான் பார்த்ததில்லை. ஜெராக்ஸ் ஆவணத்தை பார்த்தேன். ஜெராக்ஸ் ஆவணத்தில் யார் வேண்டுமானாலும் கையெழுத்து போட்டு உற்பத்தி செய்யலாம் என்றால் அது எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல உயில் பத்திரத்தில் என் தகப்பனார் குமரகுரு சாட்சி கையெழுத்து எதையும் போடவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் பற்றி எந்த விவரமும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

1, 5 முதல் 12 மற்றும் 15 பிரதிவாதி தரப்பு நீதிமன்ற பாதுகாவலர் தரப்பு குறுக்கு விசாரணை

மேற்கண்ட 2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

மறுவிசாரணை – இல்லை.